திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

அலைவாய்க் கரையில்

36

நாள் முழுதும் கடற்கரையில் மீன்பாடு வந்து விழுந்தாலும், காலையின் சௌந்தரியத்தில் அதன் கவர்ச்சிகளையும் உற்சாகங்களையும் சொல்லி முடியாது. இருள் முழுதும் அலைகளுடன் போராடி, வெள்ளாப்புப் பூத்துக் கதிரவன் ஒளி பரப்பும் நேரத்தில் வலைகளில் கடல் செல்வங்களை வாரிக் கொண்டு கரையை நோக்கி வரும் கட்டுமரங்களில் மிதந்து வரும் ஒவ்வொரு கடல் மகனும் உழைப்பென்னும் காவிய நாயகனாகவே காட்சியளிக்கிறான். கரையில் ஏறியதும் இறால் படவில்லை என்றால் ஆற்றாமையால் பொங்கிச் சீறுகின்றனர்; அடித்துக் கொள்கின்றனர். சிறுமைகளை மறக்க குடிக்கின்றனர்; வாழ்வின் இன்பங்களுக்காக ஆணும் பெண்ணும் காலமெல்லாம் துன்பம் அனுபவிக்கின்றனர். பாரில் பட்டு வலை கிழிந்துவிட்டால் எவரும் ஓய்ந்து விடுவதில்லை. பெண்சாதியின் தாலியும் அற்பமாகிவிட அதையும் விற்று வலையில் போடுகிறான். மணியன் வாழைத்தோட்டத்தில் வந்த இலாபத்தையும் பெண்சாதி நகைகளையும் போட்டு, பஞ்சாட்சரத்துடன் கூட்டுச் சேர்ந்து விசைப்படகு சொந்தத்தில் பங்கு பெற்றிருக்கிறான். அகலக்கால் வைத்து, மேலும் தவணை கட்டும் சுமை ஏற்றிருக்கிறான். ஆத்தா மருமகளுடன் இருக்கிறாள். ஜயாவை அநந்தனுக்குக் கட்டியிருக்கின்றனர். வழக்கு வலுப்பெறாமல் பீற்றர் இரண்டு நாட்கள் லாக்கப்பிலிருந்து வந்துவிட்டாலும், மரக்காரர்களுக்கும் ‘மிசின்’காரர்களுக்குமான புகைச்சல் மேலும் மேலும் தீனிகள் கொண்டு புகைவதும், அடிதடிகள் நிகழுவதுமாகக் கடற்கரை மக்களின் வரலாற்றில் விசுவரூபப் பிரச்சனையை எழுதிவைக்கிறது.

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஜயா மாசமாக இருக்கிறாள். அநந்தனும் பீற்றரும் பழைய மரத்தில் இணைந்தவர்களாகத் தொழில் செய்கின்றனர். கோடைக்காற்று வீசும் காலம். அலைகள் ஆளுயரத்துக்கு எழும்பி ஆர்ப்பரிக்கின்றன. காலைத் தொழிலுக்குக் கிளம்பிச் செல்லும் கட்டுமரங்களைத் தடையில் தள்ளி மறித்து இந்த மனிதர்களை என்ன செய்கிறேன் பார் என்று ஆத்திரம் கொண்டு அலைகள் எழும்பிச் சுருண்டு உள்ளே சென்று கரையை நோக்கிச் சாடுகின்றன. கரையிலிருந்து பார்ப்பவர்கள் அஞ்சும் வண்ணம் தன் வலிமையைக் காட்டினாலும் இறுதியில் தன்னிடம் அகப்பட்டவர்களை ‘எனக்கெதற்கு, பிழைத்துப்போ!’ என்று கரையில் தூக்கி எறிகிறது.

ஆத்தா செம்பில் கருப்பட்டி நீரும், மீன்வாங்கும் வட்டியுமாகக் காத்து இருக்கிறாள். வயோதிகத்தின் முதிர்ச்சியும் அனுபவங்களின் கீறல்களும் அவள் முகத்துக்கு என்றுமில்லாத அழகைக் கூட்டியிருக்கின்றன. கடல் நாச்சி, தன் மக்களை விளையாட்டுப் பிள்ளைகளாக நினைத்து விளையாடுகிறாள்; தன் மக்களுக்கு இந்த விளையாட்டின் வாயிலாகவே நெஞ்சுரத்தையும் அஞ்சாமையையும் நேர்மையையும் சொல்லிக் கொடுக்கிறாள்.

கணேசுவும் முருகனும் மணலில் சிப்பி பொறுக்கி விளையாடுகின்றனர். கணேசு அலையில் வந்து நின்று கை கொட்டுகிறான். மணலில் நடக்கத் தடுமாறும் முருகனும் விழுந்தும் எழுந்தும் கடலைப் பார்க்க வருகிறான்.

அவள் முருகனைத் தூக்கிக் கொண்டு மணலில் வந்து அமருகிறாள். “லே, கணேசு? பள்ளிக்கொடம் போண்ணு உன்னாத்தா சீவிச் சிங்காரிச்சி விட்டிருக்கா, எங்கியலே வந்தே? இவெ வேற...? போலே? பள்ளிக்குடம் போ!”

அவன் பாட்டிக்குப் பராக்குக் காட்டிவிட்டுக் கடற்கரையின் இன்னொருபுறம் ஆடப்போகிறான்!

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

மரம் கரைக்கு விரைந்து வருகிறது. பீற்றர் சுக்கான் பிடிக்கும் நிலையில் நிற்கிறான். அநந்தன் தண்டு வலிக்கிறான். சுக்கானில் பீற்றரைப் பார்க்கையில், தந்தையின் மறு வடிவாகவே காட்சி தருவதாக அன்னைக்குத் தோன்றுகிறது.

மச்சானும் மாப்பிள்ளையும்!

இன்று றால் பட்டிருக்குமோ?...

இவ்வளவு விசைப்படகுகள் வராமுன்னர், ஒரு நாளைக்கு நாநூறு ஐநூறு என்று வாரி வந்தனரே!... விசைப்படகுக்காரருடன் அடியும் தடியும் சண்டையும் வழக்கு மன்றமுமாகத் தொழில் வாழ்க்கைக் காற்றில் அலைபடும் மரமாக அலைபடுகிறது. இவர்கள் கரை சேர்ந்து ஓமலையும் வலைகளையும் எடுத்து வருமுன் இறால் பையுடன் அநந்தனின் தம்பி ஜகன் வருகிறான். பள்ளிக்கூடம் விட்டு, இறால்பையும் கையுமாகக் கரையில் அலைகிறான். பத்து இராலுக்கு ஒரு ரூபாய் வருமானம்.

இறாலில்லி.

பீற்றரின் முகம் கனலுகிறது.

களரும் வாளையும் அற்பமாகப் பட்டிருக்கின்றன. நண்டுகள்.

அநந்தன் வலையைத் தட்டுகையில் நண்டுகளைத் தூக்கி எறிகிறான். அப்போது வட்டக்காரனாக என்றோ அப்பன் பணயம் வைத்து வாங்கிய கடனுக்கு ஆறில் ஒரு பங்கு வருவாங்க, தானியல் வருகிறான்.

தானியலுக்குப் பீற்றர் வயசுதானிருக்கும். மினிமினுச் சட்டை, கைலி. தங்கப்பட்டையில் பெரிய கடிகாரம், மோதிரங்கள், புலிநகம் கோத்த மாடல் சங்கிலி... என்று வண்மைச் செழிப்புடன் வட்டக்காரரின் வாரிசாக நோட்டைத் தூக்கிக் கொண்டு வருகிறான். அருகில் ஒரு பயல் இவன் வசூல் செய்யும் மீன்களைச் சேமித்துச் செல்லக் கூடையுடன் தொடருகிறான்.

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பீற்றர், அநந்தன் மீனைக் கூடையில் போடுமுன் குறுக்கே பாய்ந்து வருகிறான்.

அந்தப் பயலைப் பிடித்துத் தள்ளுகிறான்.

வட்டக்கார தானியலிடம் கைமுட்டியைக் காட்டி, ‘உனக்கு எதுக்குடா மீனு? உனக்கு எதற்கடா எங்கள் பாட்டைக் கொடுக்க வேண்டும்?’ என்று அவன் கேட்பது ஆத்தாளுக்குப் புரிகிறது. அதே சமயம் இனம் புரியாததொரு திகில் அவளைக் கவ்வுகிறது.

“லே ஊமை, போப்பால...” என்று ஒதுக்கி விட்டு, வலையிலிருந்து விழும் ஒரு சிறு பிள்ளைச் சுறாவைத் தானியல் எடுத்துக் கூடையில் போடக் கை வைக்கிறான். அடுத்தகணம் அவன் மூக்கில் ஒரு குத்து... தானியலின் இளம் பச்சை நிற உயர்ந்த மினுமினுப்புச் சட்டையில் செங்குருதி வழிகிறது. ஆத்தா திடுக்கிட்டுப் போகிறாள்.

“ஏலே... போதும்... லே...”

தானியல் நோஞ்சானல்ல, இருவரும் கரையில் மோதிக் கொள்கின்றனர். மணலில் இவன் தள்ள எழுந்து அவன் உதைக்கப் போர் அங்கே நடப்பதைப் பலரும் கவனிக்காமல் செல்கின்றனர். கடற்கரையில் இத்தகைய மோதல்கள் சகஜமானவை, ஆனால்... ஆனால்...?

அவர்கள் போராடிக்கொண்டு தள்ளிப் போகிறார்கள். மணலும் குருதியுமாக உடலில் ஒற்றிக் கொள்ள பீற்றர் பார்ப்பதற்குச் சூரியனொளியில் பயங்கரமாகக் காட்சி தருகிறான்.

யாரைக் கூப்பிடுவாள் அவள்? அநந்தன் சண்டையை ரசிப்பவன் போல் நிற்கிறான். மரங்கள் வருகின்றன; ஏலக்காரர் ஏலம் கூவுகிறார்... இவர்கள் சண்டையை வேடிக்கை பார்க்கச் சிறுவர்கள் வட்டம் கூடுகின்றனர்.

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஆத்தா கத்துகிறாள், “லே கணேசு! அங்கிய சுந்தர மாம இருக்காரு, போலே, கூப்பிடு...! ஐயோ, அடிச்சிக்கிறானுவ, அந்த நாக்கில்லாப் பய... அவனுக்கு வெவரம் புரியாது. மொரடன். ஏலக்காரரே, அத சண்டய நிறுத்தும்... சண்ட சண்ட...”

அவளே ஓடி வருகிறாள், சிறுவர் கூட்டத்தைப் பிளந்து கொண்டு. குலசேகர வாத்தியார்... “வாத்தியார் சாமி! சண்டை... வேணான்னு விலக்குங்க சாமி!”

அவளுக்குக் குரல் எழும்பாமல் பீதியில் நெஞ்சடைக்கிறது. பையன்கள் விலகி நின்றாலும் உள்ளே நெருங்க வாத்தியார் அஞ்சுகிறார்.

இவன்... நெற்றி நரம்பு புடைக்க, செக்கச் செவேலென்று தானியலைக் கீழே தள்ளிக் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

“வாணாம்... வாணாலே... நெத்தம்” ரத்தத்தைக் கண்டு அவனுக்கு அச்சம் எவ்வாறு வரும்? ஆயிரமாயிரமாய் உயிர்கள் துடித்துச் சாவதைத் தொழிலின் வெற்றியாக மகிழ்ந்து கொண்டாடும் பண்பில் ஊறியவனுக்கு, இவன் உயிரின் அருமை எப்படித் தெரிந்திருக்கும்? வட்டக்காரன் அவன்.. வட்டக்காரன்... இவன் உழைப்பைக் கொள்ளையிடும் அக்கிரமக்காரன். அவனை... அவனை...

உயிர்களை மண்ணிலே ஏந்தும் கிளர்ச்சியில் சிலிர்த்துப் போய்ப் பரவசமடைந்திருக்கும் ஆத்தா பதறி உடல் துடிக்கக் கத்துகிறாள்.

“லே... வேணாம். வேணாமின்ன, என்ன காரியம் செஞ்சி போட்டேலே...”

பாறைகளில் மோதி அடித்துக் கொண்டு சமவெளியில் நீண்டு செல்லும் அருவியாக ஓலக்குரல் கடற்கரையில் பரவுகிறது. ஓமலில் வெள்ளித்துணுக்குகளாய் கிடக்கும் மீன்களில் நைலான் கயிறு அறுத்து வடிந்த குருதியில் ஈக்கள் குந்துகின்றன.

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

திடீரென்று பீற்றர் தன் உணர்வு பெற்றாற்போல் ஓட முயலுகிறான்.

"யோ... ஓடியாங்க... கொல...! கொல..." என்று யாரோ குரலெழுப்புகிறான்.

மணற்கரையின் மூலை முடுக்குகளிலெல்லாமிருந்து மக்கள் அவனைச் சூழ ஓடி வருகிறார்கள்.

ஆத்தா நாடி நரம்புகளெல்லாம் அடங்கி ஓய்ந்தாற் போன்று பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

(முற்றும்)

*****

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com